சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்.

முன்னிலை : திருமதி. கா. கன்யாதேவி, பி.ஏ.பி.எல்.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 12ம் நாள் வெள்ளிக்கிழமை

***அசல் வழக்கு எண் 59/2010***

1. ஜொகராம்மாள் (இறப்பு)
2. முகமது பாத்திமா (இறப்பு)
3. முகமது மைதீன் (இறப்பு)
4. ரகுமத்தாய்
5. பல்கீஸ் அம்மாள்
6. பஷீர் அகமது
7. முகமூதா (இறப்பு)
8. ரஷீதா அம்மாள்
9. அஜ்மல்கான்
10. முகமது இஸ்மாயில்கான்
11. ஷாஜிதா

(Amended as per order I.A.299/10 dated 04.02.2011,
Amended as per order I.A.167/11 dated 16.06.2011,
Amended as per order I.A.510/19 dated 09.12.2019) ... வாதிகள்

/எதிர்/

1. ஷாகிதா பர்வீன்
2. மேலாளர், எம்.டி.சி.சி.வங்கி, உத்தமபாளையம்.
3. பஹீம் முகமது
4. ஹாஜிராம்மாள்
5. வஜ்ராம்மாள்
6. முகமது ராவுத்தர்
7. முகமது ரபீக்
8. அப்துல் நசீர்
9. ஆரிபா

(Amended as per order I.A.330/11 dated 22.03.2012,
Amended as per order I.A.9/14 dated 21.02.2014) ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 15.02.2021ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.ஷாகுல்ஹமீது, அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.வி.கோவிந்தன் அவர்கள் ஆஜராகியும், 2, 3, 6 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், 4, 5, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.பஷீர் அவர்கள் ஆஜராகியும், 9ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.எ.சையது அப்தாகீர் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இதுநாள் வரை வழக்கின் ஆவணங்கள் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்...

***தீர்ப்புரை***

வழக்குரை 1 முதல் 8 லக்க சொத்துக்களில் 4 முதல் 6 மற்றும் 8 முதல் 11 வாதிகளுக்கு தலா 96/324 பங்கும், 1ம் பிரதிவாதிக்கு 137/324 பங்கு பாகத்தை பிரித்து கொடுக்க கோரியும், பிரதிவாதிகள் செலவு தொகை கொடுக்க கோரியும் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்</u>:**

(i) 1, 2 வாதிகள் முறையே இறந்து போன முகமது இப்ராஹிமின் சகோதரி மற்றும் தாயார் ஆவார்கள். 1ம் பிரதிவாதி அவரது மகள் ஆவார். முகமது இப்ராஹிம் மற்றும் அவரது மனைவி ஆயிஷாம்மாள் 1994ம் வருடத்தில் உத்தமபாளையத்தில் கொடூரமாக கொலை செய்யப்பட்டு உள்ளார்கள். அவர்கள் மறைவிற்கு பிறகு இஸ்லாமிய சட்டத்தின்படி, வாதிகள் சகோதரி மற்றும் தாயார் என்ற முறையில் அவரது தாவா சொத்தில் சட்டப்படி பங்கு பெற உரிமையுடையவர்கள். முகமது இபராஹிமுக்கு ஒரு சகோதரர் உள்ளார். அவர் கொலை வழக்கில் குற்றவாளி என்பதால் வாரிசுரிமையிலிருந்து விடுபட்டுள்ளார். 1ம் பிரதிவாதி வாதிகளின் உரிமையை தடுக்கும் எண்ணத்தில் தாவா 6வது லக்க சொத்தை 3ம் பிரதிவாதிக்கு 11.02.2002ம் தேதிய பதிவு கிரையப் பத்திரத்தின் மூலம் கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி கிரையம் வாதிகளின் பங்கை பொறுத்து கட்டுப்படுத்தாது என்பதால் அதனை கருத்தில் கொள்ளவில்லை. முகமது இப்ராஹிம் 2ம் பிரதிவாதி வங்கியில் லாக்கர் வைத்து அதில் ஆவணங்கள் மற்றும் சுமார் 5 லட்சம் மதிப்புடைய நகைகள் வைத்துள்ளார். 2ம் பிரதிவாதி வங்கி சட்டத்திற்கு அப்பாற்பட்டு 1ம் பிரதிவாதி லாக்கரை திறந்து அதை எடுப்பதற்கு அனுமதி கொடுத்துள்ளது. அதுகுறித்து, 2ம் பிரதிவாதி பதில் அளிக்க கடமைப்பட்டவர். 1ம் பிரதிவாதி வாதிகளின் பங்கை கொடுக்க மறுத்ததால் ஜமாத்தில் பஞ்சாயத்து நடைபெற்றது. ஆனால், வாதிகளுக்கு சட்டப்படி பங்கு கொடுக்க முன்வரவில்லை என்பதால் வாதிகள் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினர். ஆனால், எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை.

(ii) வழக்கு நிலுவையில் இருக்கும் போது, 2ம் பிரதிவாதி 06.03.2003ம் தேதி இறந்து விட்டதால் அவரது வாரிசுதாரர்கள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டனர். அதேபோல், 1ம் வாதி 02.07.2007ம் தேதி இறந்து விட்டதால் அவரது வாரிசுதாரர்கள் 3 முதல் 9 வாதிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். 1, 2 வாதிகளின் பங்கில் 3 முதல் 9 வாதிகளுக்கு உரிமை உள்ளது. வழக்கு நிலுவையில் இருக்கும் போது, 3ம் வாதி 06.04.2011ம் தேதி 4 முதல் 9 வாதிகளை அவரது வாரிசுகளாக விட்டு இறந்து விட்டார். வழக்கு நிலுவையில் இருக்கும் போது, முகமது இப்ராஹிமின் சகோதரரான கான் முகமது கொலை குற்ற வழக்கில் விடுதலை செய்யப்பட்டார் என்பதால் அவருக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது. முகமது இப்ராஹிம் இறப்பதற்கு முன்பே அவரது தந்தை இறந்து விட்டார் என்பதால் அவரது தாயார்,

மகள், சகோதரி மற்றும் சகோதரர் ஆகியோருக்கு முகமது இப்ராஹிமின் சொத்தில் பங்கு உள்ளது. அதேபோல், கான் முகமது இறப்பதற்கு முன்பே அவரது மனைவி இறந்து விட்டதால் கான் முகமதுவின் தாயாரான 2ம் வாதி மற்றும் 4 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது. முகமது இப்ராஹிமின் தாயாரான 2ம் வாதி இறந்து விட்டதால் அவரது பங்கில் அவரது மகளான 1ம் வாதி மற்றும் அவரது பேரன், பேத்திகளான 4 முதல் 9 வாதிகள் மற்றும் 3 முதல் 8 பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளது. வழக்கு விசாரணையின் போது, 9ம் பிரதிவாதி தன்னை தரப்பினராக சேர்க்கக் கோரி மனு தாக்கல் செய்து, அனுமதிக்கப்பட்டதன் பேரில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். வழக்கு நிலுவையில் இருக்கும் போது, 1ம் பிரதிவாதியிடம் 9ம் பிரதிவாதி வழக்கை பற்றி தெரிந்தே கிரையம் பெற்றுள்ளதால் அவருக்கு தாவா 6வது லக்க சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை. வழக்கு நிலுவையில் இருக்கும் போது 7ம் வாதி 02.09.2019ம் தேதி 10 மற்றும் 11 வாதிகளை வாரிசுகளாக விட்டு இறந்து விட்டார். தாவா 9வது லக்க சொத்தில் வாதிகள் எவ்வித உரிமை மற்றும் பங்கு கோரவில்லை. இருப்பினும், பாகப்பிரிவினை வழக்கு என்பதால் தாவா 9வது லக்க சொத்தும் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :</u>**

இவ்வழக்கு போதிய தரப்பினரை சேர்க்காத காரணத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. 1ம் வாதி, 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான முகமது இப்ராஹிமின் சகோதரி என்பதால் பிரிவு 63 மற்றும் 66 ஷரியத் சட்டத்தின்படி, அவர் வாரிசுரிமையிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். 1ம் பிரதிவாதியின் பெற்றோர்கள் அவரது உறவினர்களால் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். கொலை குற்ற வழக்கு மதுரை செசன்ஸ் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தில் அதற்கு எதிராக சீராய்வு மனு நிலுவையில் இருந்து வருகிறது. ஹனபி சட்டத்தின்படி, குழந்தைகள் இருக்கும் போது சகோதரிகள் பங்கு கேட்க முடியாது. வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் உள்ளார்கள் என்பது மறுக்கப்படுகிறது. 1ம் பிரதிவாதி மட்டுமே தாவா சொத்தில் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் உள்ளார். 11.02.2002ம் தேதிய கிரையப் பத்திரத்தை இந்த வழக்கில் தள்ளுபடி செய்ய முடியாது. அசையும் சொத்துக்கள் குறித்து மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது. நகைகள் தகப்பனாரால் பரிசாக வழங்கப்பட்டுள்ளதால் அதுகுறித்து வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை. 1ம் பிரதிவாதி வாதிகளுக்கு தாவா சொத்தில் அவரது சகோதரிக்கு உரிமை இல்லை என்று பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். 1ம் வாதிக்கு தாவா சொத்தில் எவ்வித சட்டப்படியான உரிமையும் இல்லை என்பதால் அவருக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல. எனவே, இவ்வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**<u>4) 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :</u>**

2ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு சட்டம் மற்றும் பொருண்மையின் அடிப்படையில் நிலைக்கத்தக்கதல்ல. தமிழ்நாடு கோஆபரேட்டிவ் ஆக்ட் 1983ன்படி வாதிகள் 2ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்வதற்கு உரிமை இல்லை மற்றும் சிவில் வழக்கு தாக்கல் செய்ய வாதிகளுக்கு தடை செய்யப்பட்டுள்ளது. முகமது இப்ராஹிம் கணக்கு எண் 50ன் கீழ் பாதுகாப்பு பெட்டகத்தை 2ம் பிரதிவாதி வங்கியில் 18.10.1989 முதல் வாடகை அடிப்படையில் பெற்றிருந்தார். மேற்படி வாடகை அவரது சேமிப்பு கணக்கு எண் 5070லிருந்து பெறப்பட்டு வந்தது. மேற்படி லாக்கருக்கு இரண்டு சாவிகள் உள்ளன. அதில் ஒன்று கணக்கு வைத்துள்ளவரிடமும், மற்றொன்று வங்கியிடமும் இருக்கும். லாக்கரை மேற்படி இரண்டு சாவிகள் மூலமாக மட்டுமே திறக்க முடியும். முகமது இப்ராஹிம் 27.04.1993 வரை லாக்கரை பயன்படுத்தி வந்தார். அதன்பிறகு பயன்படுத்தாமல் மூடப்பட்டு தான் இருந்தது. முகமது இப்ராஹிம் அவர் மட்டுமே லாக்கரை பயன்படுத்தி வந்தார். அவரது மனைவி ஆயிஷாம்மாள் மற்றும் மகள் ஷாஜிதா பர்வீன் ஆகியோரை மேற்படி லாக்கருக்கு நாமினியாக நியமித்திருந்தார். சட்ட விதி மற்றும் கோட்பாட்டின்படி, தனிப்பட்ட வாடகைதாரர் இறந்து விட்டால் அவரது வாரிசுகள் அங்கீகரிக்கப்படுவார்கள். அதன்படி, 2ம் பிரதிவாதி வங்கி அவரது வாரிசுகளை பயன்படுத்த அனுமதிக்க உரிமையுள்ளது. 2ம் பிரதிவாதி இவ்வழக்கைப் பொறுத்து தேவையற்ற தரப்பினர் ஆவார். தேவையில்லாமல் 2ம் பிரதிவாதியை அலைக்கழிப்பு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். 2ம் பிரதிவாதியைப் பொறுத்து எவ்வித பரிகாரமும் கேட்காததால் இவ்வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>5) 7ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 4, 5, 8 பிரதிவாதிகள் ஏற்றுக் கொண்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :</u>**

வாதிகளின் வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. வாதிகள் கோரும் பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல. இவ்வழக்கில் ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகள் தவிர இதர சங்கதிகள் மறுக்கப்படுகிறது. அவைகளை வாதிகளே நிரூபிக்க வேண்டும். வழக்கின் தரப்பினர்களுக்கு கணக்கிடப்பட்டுள்ள பாகம் சரியல்ல. இறந்து போன முகமது இப்ராஹிம் சில சொத்துக்கள் மேற்படி வழக்கின் சொத்து விபரத்தில் சேர்க்கப்படவில்லை. பரிகாரம் ஏ-ல் 4 முதல் 8 பிரதிவாதிகளின் பங்கு பாகம் என்ன என்று கூறப்படாதது சரியல்ல. 4 முதல் 8 பிரதிவாதிகள் மீது பரிகாரம் சி-ல் செலவு தொகை கேட்டிருப்பது சரியல்ல.

**6) 9ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :**

இவ்வழக்கில் ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகள் தவிர இதர சங்கதிகள் மறுக்கப்படுகிறது. வாதிகள் மற்றும் இந்த பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த 1ம் பிரதிவாதியின் பெற்றோர்கள் பற்றிய விபரங்கள் மற்றும் உறவுமுறைகள் குறித்தும், 1ம் பிரதிவாதியின் பெற்றோர்கள் இறந்த பின் வாதிகளுக்கு முஸ்லிம் வாரிசுரிமை சட்டப்படி சொத்துக்களில் 1/2 பங்கு பாகம் உரிமை உள்ளது என்பதையும் வாதிகளே கண்டிப்பாக நிரூபிக்க வேண்டும். இந்த பிரதிவாதி இந்த வழக்கு நிலுவையில் உள்ளதை தெரிந்து கொண்டே வழக்குரை 6ம் லக்க சொத்தை கிரையம் பெறவில்லை. உண்மையில், வழக்குரை 6ம் லக்க சொத்து 1ம் பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்டது என்ற நல்ல எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 14.07.2000ம் தேதி தகுந்த பிரதிபிரயோஜனத்தின் பேரில் 1ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார். ஆதலால், இந்த பிரதிவாதி Bonafide purchase for valuable consideration என்ற கோட்பாட்டின் அடிப்படையில் சமூகம் நீதிமன்றத்தால் பாதுகாக்கப்பட வேண்டியவராக உள்ளார். வாதத்திற்காக வாதிகளுக்கு வழக்குரையில் கோரியுள்ளபடி பரிகாரம் கிடைக்கும் என்று சமூகம் நீதிமன்றம் முடிவு செய்யும்பட்சத்தில் இந்த பிரதிவாதி கிரையம் பெற்று சொத்தை 1ம் பிரதிவாதியின் பங்கு பாகத்திற்கு ஒதுக்கீடு செய்து, இந்த பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தை இந்த பிரதிவாதிக்கே கிடைக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்க வேண்டியது சட்டப்படி அவசியமாயும், நியாயமாயும் உள்ளது.

**7) 01.07.2014 அன்று 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம் :**

(i) இவ்வழக்கில் ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகள் தவிர இதர சங்கதிகள் மறுக்கப்படுகிறது. லேட்.முகமது இப்ராஹிம் மற்றும் ஆயிசாம்மாள் ஆகியோர் கணவன், மனைவி என்பதும், அவர்கள் 1994ம் ஆண்டு கொலை செய்யப்பட்டு விட்டார்கள் என்பதும், அதன்பின் முகமது இப்ராஹிம் அவர்களின் மூத்த சகோதரி 1ம் வாதியும், 2ம் வாதி தாயார் என்று கண்டுள்ளதும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. அதே சமயம் இஸ்லாமிய விதிமுறைகளின்படி மேற்படியார்களுக்கு வழக்குரை சொத்தில் உரிமை இருக்கிறது என்பதை வாதிகளே நிரூபிக்க வேண்டும். மேற்படி முகமது இப்ராஹிம் அவர்களின் மூத்த சகோதரர் கே.எம்.கான்முகமதுவும், அவரின் மூன்று ஆண் மக்களான முகமது ராவுத்தர், முகமது ரபீக், அப்துல் நசீர் ஆகியோர்களும் கொலை வழக்கில் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டிருந்தனர். மேற்படி கான்முகமது வழக்கு நிலுவையில் இருக்கும் போது இறந்து விட்டார் என்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது. 1, 2 வாதிகளுக்கு இஸ்லாமிய விதிமுகைளின்படி 4ல் 1 பாகம் உரிமை இருப்பதாக வழக்குரையில் கண்டுள்ளதை வாதிகளே நிரூபிக்க வேண்டும். வழக்குரை சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதியும், 1, 2 வாதிகளும் கூட்டாக வைத்து அனுபவித்து

வந்தார்கள் என்று கண்டுள்ள உண்மைக்குப் புறம்பானது. உண்மையில், 1ம் வாதி சுமார் 1965ம் வருடத்திலேயே திருமணம் முடித்து சென்னையில் குடியிருந்து வந்தார். மேற்படி முகமது இப்ராஹிம் காலமான பின்பே 1ம் வாதி உத்தமபாளையத்திற்கு குடி பெயர்ந்தார். அதே போல் 2ம் வாதி கான்முகமது அவர்கள் தந்தையின் அனுமதியின் பேரில் அண்ணன், அவரது மக்கள் என்ற முறையில் மேற்படி வீட்டின் ஒரு பகுதியில் (மாடியில்) குடியிருக்க அனுமதித்திருந்தார். 1ம் பிரதிவாதியின் பெற்றோர் இறப்பிற்கு பின்பு மேற்படி கான்முகமது, அவரது மக்களை வீட்டை விட்டு காலி செய்யுமாறு வலியுறுத்தியதற்கு அவர்கள் 1ம் பிரதிவாதியோ, அவரது கணவரோ வந்தால் கொலை செய்து விடுவோம் என பலமுறை மிரட்டல் செய்து வருகிறார்கள்.

(ii) வழக்குரை சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு 11.02.2002ம் தேதி செய்து கொடுத்த கிரையம் வாதிகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்று கண்டுள்ளதை வாதிகளே நிரூபிக்க வேண்டும். ஏனெனில், வழக்குரை 6ம் லக்க சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதியின் தந்தை 1993ம் வருடம் 3ம் பிரதிவாதியிடமிருந்து ரூபாய் இரண்டு லட்சம் பெற்றுக் கொண்டு வழக்குரை 6ம் லக்க சொத்தின் அசல் ஆவணத்தை 3ம் பிரதிவாதியின் வசம் அடமானம் வைத்திருந்தார். 1994ம் வருடம் 1ம் பிரதிவாதியின் தந்தை கொலை செய்யப்பட்டு இறந்த பின்பு 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியை மட்டும் வாரிசுதாரர் என்ற முறையில் கடன் தொகையை செலுத்த வேண்டும் என்று பலமுறை நேரிலும், ஆட்கள் மூலமும் துயர்ந்ததில் 1ம் பிரதிவாதியால் மேற்படி கடன் தொகையை செலுத்த வழியில்லாததால், 1ம் பிரதிவாதி கடன் தொகையை செலுத்த காலதாமதம் செய்து வந்தார். 2002ம் ஆண்டு வாக்கில் கடன் தொகையை செலுத்த வேறு வழியில்லாததால், 1ம் பிரதிவாதி மத்தியஸ்தர்களை வைத்து பேசி, 3ம் பிரதிவாதியிடம் தன் தந்தை அடமானமாக வைத்திருந்த அசல் ஆவணத்தின் இடப்பெருமான தொகையுடன் முடித்துக் கொள்ள வேண்டும் என்பதற்கிணங்க அன்றைய மார்க்கெட் நிலவரப்படி ரூ.1,35,000/- தொகையுடன் பிரச்சனையை முடித்துக் கொள்ளுமாறு பேசி முடிக்கப்பட்டு, 1ம் பிரதிவாதியின் தந்தைக்கு உரிமையுடைய சொத்தை 3ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்.

(iii) 2ம் பிரதிவாதியின் நிர்வாகத்திலும், பராமரிப்பிலும் இருந்து வந்த பாதுகாப்பு பெட்டகத்தை எவ்வித சட்ட விதிமுறைகளையும் பின்பற்றாது, 1ம் பிரதிவாதி திறக்க செய்து, அதிலிருந்த ஐந்து லட்சம் மதிப்புள்ள தங்க நகைகள் மற்றும் ஆவணங்களை 1ம் பிரதிவாதியின் பாதுகாப்பில் வைத்துள்ளார் என்று சொல்லியுள்ளது உண்மைக்கு புறம்பானது. 2ம் பிரதிவாதியின் வங்கியில் 1ம் பிரதிவாதியின் தந்தை பெயரில் பாதுகாப்பு பெட்டக வசதி பெற்றிருந்தார் என்கிற விபரம் மட்டுமே தெரியுமே தவிர அதில் என்ன வைத்துள்ளார் என்பது இதுவரை எதுவும் தெரியாது. 1, 2 வாதிகள் 1994ம் ஆண்டு அக்டோபர் மாதம் உத்தமபாளையம் ஜமாத்தார்களிடம் வழக்குரை சொத்தை பொறுத்தும், பாதுகாப்பு பெட்டகத்தை பொறுத்தும் பிரச்சனை ஏற்பட்டதால் 1ம் பிரதிவாதி பாதுகாப்பு பெட்டகத்தை திறக்கவில்லை.

(iv) 1, 2 வாதிகள் வழக்குரை சொத்தைப் பொறுத்து ஜமாத்தார்களிடம் முறையிட்டும், அவர்களுக்குரிய பாகத்தை பிரித்து தர 1ம் பிரதிவாதி மறுத்து விட்டார் என்பது உண்மைக்குப் புறம்பானது. 1, 2 வாதிகள் உத்தமபாளையம் ஜமாத்தார்களிடம் 1994ம் ஆண்டு அக்டோபர் மாதம் வழக்குரை சொத்து சம்பந்தமாக முறையிட்டு எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லை. அதன்பின் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே யாதொரு பஞ்சாயத்தும் நடைபெறவில்லை. அதனாலேயே, தாவா வழக்கு காலாவதி தோஷத்திற்கு ஆட்பட்டுள்ளது. 1, 2 வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் 1ம் பிரதிவாதிக்கு கிடைக்காததால் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை.

(v) வழக்குரை 1, 5 லக்க சொத்துக்களைப் பொறுத்து 1ம் பிரதிவாதியின் தந்தை உயிருடன் இருந்த காலத்திலேயே மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்து விட்டார். வழக்குரை 2வது லக்க சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதியின் தந்தை உத்தமபாளையம் குரும்பபட்டியில் உள்ள பச்சையனிடமிருந்து ரூ.40,000/- பெற்றுக் கொண்டு பதிவில்லா ஒத்திப் பத்திரம் எழுதிக் கொடுத்து, ஒத்தி காலம் முடிந்த பின்பு 1ம் பிரதிவாதியிடம் பச்சையன் 1ம் பிரதிவாதியிடம் மேற்படி கடன் தொகையை கேட்டு நிர்பந்தம் செய்ததால் 1ம் பிரதிவாதி வேறு வழியின்றி எஸ்.பி.எம்.சையதுகான் அவர்களிடம் ஒரு லட்சம் பெற்று, அவரின் பெயருக்கு பொது அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்து, மேற்படி ஒரு லட்சத்தில் ரூ.40,000/- கொடுத்தது போக, மீதி ரூ.60,000/-ல் 1ம் பிரதிவாதியின் தந்தை கடன் பெற்றிருந்த நபர்களான நஸீராப்பாள் என்பவருக்கு ரூ.30,000/-மும், சொகராம்மாள் என்பவருக்கு ரூ.40,000/-ல் 1ம் பிரதிவாதி கையிலிருந்து ரூ.10,000/-மும் சேர்த்து கடன் செலுத்தியுள்ளார். 1ம் பிரதிவாதி மேற்படி நபர்களிடம் கடன் பெற்ற விபரத்தை தெளிவாக தனித்தாளில் எழுதி வைத்துள்ளார்.

(vi) வழக்குரை 7ம் லக்க சொத்தைப் பொறுத்து வழக்குரையில் ஒரு லட்சம் என்று அதிகமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அம்பாசிடர் கார் ரூ.49,000/-க்கு 1996 – 1997ல் விற்பனை செய்யப்பட்டு, மேற்படி தொகையுடன் ரூ.30,000/- சேர்த்து ரூ.79,000/-த்தை 1ம் பிரதிவாதியின் தந்தை கடன் பெற்ற அயூப்கான் அவர்களிடம் திரும்ப செலுத்தி விட்டார். 3ம் லக்க சொத்து புறம்போக்கு நிலம் ஆகும். அதில் ஒரு புளியமரம் மட்டுமே உள்ளது. அதில் வரும் புளியம்பழம் வீட்டு உபயோகத்திற்கே போதுமானதாக இல்லை. 3 முதல் 9 வாதிகளுக்கும், 4 முதல் 8 பிரதிவாதிகளுக்கும் வழக்குரை சொத்தில் உரிமை கோர எவ்வித உரிமையும் இல்லை. 10ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்த தொகை முழுவதையும் 1ம் பிரதிவாதியின் தந்தை பெற்ற கடனை செலுத்தவே போதுமானதாக இல்லை. 1ம் பிரதிவாதியின் தந்தைக்கு மாரடைப்பு ஏற்பட்ட போது, அவரின் இருதய அறுவை சிகிச்சைக்கு உடனடியாக பணம் தேவைப்பட்டதால் குடும்ப நண்பர் வி.என்.பி.கணேசனின் தந்தை வி.என்.பாலகிருஷ்ணனிடம் ரூ.1,80,000/- கடன் பெற்றதையே இன்னும் திருப்பி செலுத்தாமல் இதுநாள்வரை 1ம் பிரதிவாதியை துயர்ந்து கொண்டுள்ளார்கள். வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>8) 11.11.2020 அன்று 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம் :</u>**

வாதிகளின் வழக்கு தேவையான கட்சிக்காரர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினால், Non joinder of necessary parties என்ற சட்ட தோஷத்திற்கு உள்ளாகிறது. வாதியை 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் போது, "வழக்குக்குப் பின்னர் தாவா 1வது லக்க சொத்தை யாருக்கோ கிரையம் செய்து கொடுத்து விட்டார்கள், அந்த சொத்தை வாங்கியவரை இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரி தான்" என்று ஒப்புக் கொண்ட நிலையில், வாதிகளின் வழக்கானது மேற்கூறிய Non joinder of necessary parties என்ற சட்ட தோஷத்திற்கு உள்ளாகிறது. அதேபோல், பிராது 6வது லக்க சொத்தை 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து மேற்படியாரும் மதியழகன் என்பவருக்கு விற்ற விபரத்தினை 1ம் பிரதிவாதி தனது முதல் விசாரணை அபிடவிட்டில் கூறியிருந்தும், அவரை இவ்வழக்கில் கட்சி சேர்க்காததால் மேற்படி வழக்கானது Non joinder of necessary parties என்ற சட்ட தோஷத்திற்கு உள்ளாகிறது. வாதி தரப்பு 1வது சாட்சியை 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது, ஏ ஷெடியூலில் கண்ட 8வது லக்க வீட்டை கான் முகமது, முகமது இப்ராஹிம் மற்றும் அவரது மனைவிக்கும் 1992ம் ஆண்டே கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரி தான் என்று ஒப்புக் கொண்ட நிலையில், பி.வா.சா.ஆ.2ல் துலக்கப்பட்ட சொத்தில் ஏன் பாகவிஸ்தி கோரவில்லை. ஏனெனில், மேற்படி சொத்தை பி.வா.சா.ஆ.2 மூலம் கிரையம் கொடுத்த பின்னரும் மேற்படி கான் முகமதுவும், அவரின் ஆண் மக்களும் வெளியேற மறுத்து விட்டதால், மேற்படி சொத்தினை இவ்வழக்கில் சேர்த்து பாகவிஸ்தி கோரினால் மேற்படியார்கள் சட்ட முரணான வழிகளில் அனுபவித்து வரும் சொத்தை இழக்க நேரிடும் என்பதால் மேற்படி சொத்தில் பாகவிஸ்தி கோரவில்லை. மேற்படி Partial partition invalid in law. எனவே இதன் காரணமாகவும் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று.

9) மேற்படி வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையின் அடிப்படையில் 23.04.2010ம் தேதி இவ்வழக்கில் ஆய்வுக்காக கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. வழக்கிடை சொத்துக்களில் 1, 2 வாதிகளுக்கு தலா 1/4 பாக உரிமை உண்டா?
2. வாதிகள் தாவாவில் கோரியுள்ளபடி பாகப்பிரிவினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை பெற தக்கவர்களா?
3. வாதிகள் பெறத்தக்க வேறு நிவாரணங்கள் என்ன?

10) 11.11.2020ம் தேதி கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. Whether the suit is bad for non-joinder of necessary parties?
2. Whether the suit is hit by partial partition?

11) இவ்வழக்கில், வாதிகள் தரப்பில் 9ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 8ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆகவும், 1ம் பிரதிவாதி பி.வா.சா.2 ஆகவும், 9ம் பிரதிவாதியின் கணவர் பீர்முகம்மது பி.வா.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**12) கூடுதல் எழு வினா 1க்கான தீர்வு :**

வாதிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், பிரதிவாதிகள் தரப்பில் போதிய தரப்பினரை சேர்க்கவில்லை என்ற தோஷத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று மட்டுமே சொல்லியுள்ளார்கள் என்றும், போதிய தரப்பினர்கள் யார் என்பது பற்றி குறிப்பிட்டு, எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றும், அதனால் இவ்வழக்கு போதிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்படாது என்று வாதிட்டார். அதற்கு மாறாக, பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர்கள், வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், இவ்வழக்கிற்கு பின்னர் தாவா 1வது லக்க சொத்தை யாருக்கோ கிரையம் கொடுத்து விட்டார்கள் என்றும், அந்த சொத்தை வாங்கிய நபரை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரி தான் என்று ஒப்புக் கொண்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், தாவா 6வது லக்க சொத்தினை 3ம் பிரதிவாதி கிரையம் பெற்று, அவர் கோம்பையை சேர்ந்த மதியழகன் என்பவருக்கு விற்றுள்ளதால் அவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியம் என்றும், அதன் காரணமாகவே வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று வாதிட்டார்.

13) மேலும், வாதிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், ஒருவேளை தாவா சொத்துக்கள் ஏதேனும் வில்லங்கப்படுத்தப்பட்டிருந்தால், அது வாதிகளின் பங்கைப் பொறுத்து கட்டுப்படுத்தாது என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும் போது செய்யும் எவ்வித சொத்து பரிமாற்றமும் வாதிகளின் பங்கை பாதிக்காது என்றும், உண்மையில், கிரையம் பெற்றவர்கள் தகுந்த பிரதிபிரயோஜனத்தின் பேரில் கிரையம் பெற்றிருந்தால், அவர்கள் தானாகவே இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி தரப்பினர்களாக சேர்க்கக் கோரி மனு செய்திருப்பார்கள் என்றும், கீழ்கண்ட முன் மாதிரி தீர்ப்பினை மேற்கோள் காட்டி வாதிட்டார்.

14) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் A.S.No.827/1992 and CMP Nos.1389 to 1394/2009 (Shakeela Begum vs. Mohammed Yakkub and others) என்ற முன் மாதிரி தீர்ப்பில்,

*"Therefore, it is seen from the decisions rendered by the Honourable Supreme Court and the Division Bench of this Court that non impleadment of all the sharers in a suit for partition will be fatal. But in the present case, the persons, who were not impleaded, were not sharers and they were subsequent purchasers. Further, no*

*particulars were given by the second defendant regarding the subsequent purchasers, whether they purchased the properties before the filing of the suit or after the filing of the suit. If they had purchased the properties after the filing of the suit, their sales were hit by doctrine of lis pendens and in that context, the question whether they have to be impleaded as proper or necessary parties has to be considered."*

*"According to me, in the reported judgments of the Honourable Supreme Court, viz., (2010) 7 SCC 417, (2012) 8 SC 384 and AIR (2005) SC 2209=2005-3-L.W. 728 (supra), the Honourable Suupreme Court ordered impleadment of transferee pendente lite in a suit for specific performance holding that the transferee pendente lite in a suit for specific performance holding that the transferee pendente lite has got a substantial interest in the suit property and any decree that may be passed would affect his rights also. But, in a suit for partition, the position is different. In the suit for partition, while passing a preliminary decree, the entitlement of a party to a share in the suit properties is determined. As stated supra, in the suit for partition, if sharers were not impleaded, then, the suit is liable to be dismissed on the ground of non-joinder of necessary parties. But, in so far as the subsequent purchasers are concerned, they cannot be considered as necessary parties and they may only be considered as proper parties."*

*"Therefore, I am of the opinion that the Trial Court ought not to have dismissed the suit for non-joinder of subsequent purchasers, in the absence of any details given by the respondents/defendants, and subsequent purchasers may be proper parties and their presence is required only at the time of final decree proceedings and those persons can also be impleaded at the stage of the final decree to work out their remedies. Therefore, the point for consideration is answered in favour of the appellant/plaintiff, and, I hold that in a suit for partition, in the absence of any particulars provided by the defendants regarding the subsequent transferees, the suit cannot be dismissed on that ground and subsequent purchasers can be added in the final decree proceeding, as they will have to work out their rights with respect to the shares allotted to their vendors".* என்று கூறப்பட்டுள்ளது.

15) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் S.A.No.1674/2000 and CMP Nos.14465/2000 (K.Jagannathan vs. Ramamoorthy & others) என்ற முன் மாதிரி தீர்ப்பில்,

*"From the aforesaid decision, it is clear that in a suit for partition, a preliminary decree has to be passed declaring the rights of the parties and it is always obligatory on the part of the trial court to relegate to the second stage in the same proceedings to conduct an enquiry into the allotment of shares at the final decree stage. Allotment of a particular portion to the particular party on equity basis at the preliminary stage itself would affect the rights of other parties. Hence, the first appellate court has rightly set aside the directions issued by the trial court, that the portions in which the parties are in possession sould be allotted to the respective parties on equity basis in the preliminary decree itself. In view of the aforesaid decision, the principle of equity to be followed while making actual allotment in the final decree proceedings."*

16) இவ்வழக்கில், பிரதிவாதிகள் தரப்பில் தாவா 1வது லக்க சொத்தை யாருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்பது பற்றி எதிர் வழக்குரையிலும், கூடுதல் எதிர் வழக்குரையிலும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. மேலும், அதற்கு ஆதரவாக எவ்வித ஆவண சாட்சியங்களும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேற்படி முன் மாதிரி தீர்ப்புகளின் அடிப்படையில், 1ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்றவர்கள் அவருக்கு ஒதுக்கப்பட்ட பங்கிலிருந்து இறுதிநிலை தீர்ப்பாணையில் பரிகாரம் பெற்றுக் கொள்ள இயலும் என்பதால் மேற்படி வாதிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞரின் வாதம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மேற்படி முன் மாதிரி தீர்ப்புகளின் அடிப்படையில், பிரதிவாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள அவசிய தரப்பினரை சேர்க்கவில்லை என்ற எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, அவ்வாறே இவ்வெழு வினாவிற்கு விடை காண்கிறது.

**<u>17) கூடுதல் எழு வினா எண் 2க்கான தீர்வு:</u>**

1ம் பிரதிவாதி தனது கூடுதல் எதிர் வழக்குரையில், வா.சா.1 தனது சாட்சியத்தில், ஏ ஷெடியூலில் கண்ட 8வது லக்க வீட்டை கான்முகமது, முகமது இப்ராஹிம் மற்றும் அவரது மனைவிக்கு 1992ம் ஆண்டே கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரி தான் என்று ஒப்புக் கொண்ட நிலையில், பி.வா.சா.ஆ.2ல் உள்ள சொத்தில் ஏன் பாக விஸ்தி கோரவில்லை என்றால் பி.வா.சா.ஆ.2 மூலம் கிரையம் செய்து கொடுத்த பின்னரும், கான் முகமதுவும், அவரது ஆண் மக்களும் வெளியேற மறுத்து விட்டதால், அச்சொத்தினை இவ்வழக்கில் சேர்த்து பாகம் கோரினால் அவர்கள் சட்ட முரணான வகையில் அனுபவித்து வரும் சொத்தை இழக்க நேரிடும் என்பதால் அதில் பாகம் கோரவில்லை என்று சொல்லியுள்ளதால் இவ்வழக்கு பகுதி பாகப்பிரிவினை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளார்.

18) பி.வா.சா.ஆ.2 ஆவணம் 01.07.1978ம் தேதிய பாகப்பிரிவினையின்படி, கான் முகமதுவுக்கு ஏ ஷெடியூல் 8வது லக்கமாக ஒதுக்கப்பட்ட சொத்தின் ஒரு பகுதியினை கான் முகமது, முகமது இப்ராஹிமுக்கு கிரையம் செய்து கொடுத்த பதிவு கிரையப் பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் ஆகும். அதேபோல், பி.வா.சா.ஆ.3 கிரையப் பத்திரம், ஆயிஷாம்மாளுக்கு, கான் முகமது பி.வா.சா.ஆ.2க்கு அடுத்துள்ள பகுதியைப் பொறுத்து எழுதிக் கொடுத்த பத்திரம் ஆகும். மேற்படி ஆவணங்கள் 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தனது சாட்சியத்தில், கான் முகமது கிரையம் செய்து கொடுத்த பிறகும் மாடிப் பகுதியில் அவரது குடும்பத்தினர் தங்கிக் கொள்ள அனுமதி கொடுக்கப்பட்டது என்றும், காலி செய்ய மறுத்து, கொலை மிரட்டல் செய்து வருகிறார்கள் என்று சொல்லியுள்ளார். மேற்படி பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 கிரைய சொத்துக்கள் குறித்து 1ம் பிரதிவாதி அதற்கு முன்பு தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை.

19) பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், *"தாவா 4வது லக்க சொத்தில் மேல்பகுதியை மட்டும் பி.வா.சா.ஆ.2ன் வாயிலாக எனது பெரியப்பா எனது அப்பாவிற்கு விற்றார் என்று சொன்னால் சரியல்ல என்றும், அந்த வீட்டை என் தந்தைக்கும், தாய்க்கும் சரிபாதியாக கொடுத்துள்ளார்கள்"* என்று சொல்லியுள்ளார். அதேபோல், தனது சாட்சியத்தில், *"தாவா 4வது லக்க சொத்தின் கிழக்குப் பக்கம் உள்ள பகுதியைத்தான் பி.வா.சா.ஆ.3 வாயிலாக எனது தாயாருக்கு எனது பெரியப்பா கிரையம் கொடுத்திருக்கிறார் என்று சொன்னால் எனக்கு தெரியாது"* என்று சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில், பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3ல் உள்ள சொத்துக்கள் தாவா 4வது லக்க சொத்தின் ஒரு பகுதி என்பது தெரிய வருகிறது. ஆனால், கான் முகமதுவின் வாரிசுகளான 4 முதல் 8 பிரதிவாதிகள் அதுகுறித்து எவ்வித எதிர்வாதமும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

20) கடந்த 29.03.2021ம் தேதி வாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.2 பத்திரத்தில் உள்ள சொத்தைப் பொறுத்து தாங்கள் எவ்வித பங்கும் கோரப்போவதில்லை என்று குறிப்பாணை தாக்கல் செய்து, இந்நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், வாதிகள் தரப்பில் பிராதை திருத்தம் செய்யக் கோரி ஐ.ஏ.நம்பர் 247/2021 மனு தாக்கல் செய்யப்பட்டு, தாவா 9வது லக்க சொத்தில் வாதிகள் எவ்வித உரிமை மற்றும் பங்கு கோரவில்லை என்றும், இருப்பினும், பாகப்பிரிவினை வழக்கு என்பதால் பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 பத்திரங்களில் உள்ள சொத்துக்களை தாவா 9வது லக்க சொத்தாக சேர்க்கப்பட்டு, திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், இவ்வழக்கு பகுதி பாகப்பிரிவினை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ள வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, அவ்வாறே இவ்வெழு வினாவிற்கு விடை காண்கிறது.

**<u>21) எழு வினாக்கள் 1 மற்றும் 2க்கான தீர்வு :</u>**

வாதிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், வாதிகளின் சகோதரர் மற்றும் மகனான முகமது இப்ராஹிம் மற்றும் அவரது மனைவி கொலை செய்யப்பட்டனர் என்றும், அவரது சகோதரரான கான் முகமது மற்றும் அவரது வாரிசுகள் கொலைக் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டு குற்ற வழக்கு நடைபெற்று வந்ததால் முதலில் அவர்களுக்கு பங்கு இல்லை என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, பின்னர் குற்ற வழக்கில் விடுதலையாகி விட்டதால் அவர்களுக்கும் பங்கு உள்ளது என்றும், அதனடிப்படையில், அவர்களும் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், முகமது இப்ராஹிம் மற்றும் அவரது மனைவி ஆகியோரில் யார் முதலில் இறந்தார் என்பதற்கு எவ்வித சாட்சியமும் இல்லை என்பதால் இருவரும் ஒரே நேரத்தில் இறந்ததாகவே கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றும், அவர்களது சொத்துக்களை அவரது வாரிசுகள் பெற்றுக் கொள்ள முடியும் என்றும், அதனால் முகமது இப்ராஹிமின் சொத்துக்களை வாரிசு முறைப்படி வாதிகள் பெற அருகதை உடையவர்கள் என்றும், 1ம் பிரதிவாதி தரப்பில் முகமது இப்ராஹிமின் கடன்களை செலுத்துவதற்காக தாவா சொத்துக்களின் ஒரு பகுதி விற்கப்பட்டது என்று எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்துக்களில் வாதிகளுக்கும் பங்கு உள்ளதால் மற்றொரு பங்குதாரரான 1ம் பிரதிவாதி வாதிகளின் பங்கை தடுக்கும் வகையில் செய்த வில்லங்கம் வாதிகளின் பங்கைப் பொறுத்து கட்டுப்படுத்தாது என்றும், வாதிகளுக்கு உரிய பாகம் பிரித்து உத்தரவு வழங்குமாறு வாதிட்டார்.

22) அதற்கு மாறாக, 1ம் பிரதிவாதி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், முகமது இப்ராஹிம் மற்றும் அவரது மனைவி ஒரே சமயத்தில் கொலை செய்யப்பட்டுள்ளதால், யார் முதலில் இறந்தார்கள் என்பது நிர்ணயிக்க முடியாத போது, இந்திய சாட்சிய சட்டத்தின்படி, யார் அதில் மூத்தவர்கள் மற்றும் இளையவர்கள் என்பதையும், அதில் நோயாளிகள் யார் என்பதையும் கருத்தில் கொண்டு, பொதுவாக மூத்தவர் மற்றும் நோயாளி தான் முதலில் இறந்திருப்பார் என்று அனுமானித்துக் கொள்ளலாம் என்றும், அதனடிப்படையில், முகமது இப்ராஹிம் தான் முதலில் இறந்தார் என்று அனுமானித்து, அவரது மனைவிக்கும் பாகம் கிடைக்கத்தக்கது என்று வாதிட்டார். மேலும், பாகப்பிரிவினைப் பத்திரத்தில் இரத்த சொந்தம் தவிர பொருட்சொந்தம் இல்லை என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதால் வாதிகளுக்கு எவ்வித பங்கும் கிடைக்கத்தக்கதல்ல என்று வாதிட்டார். அதற்கு வாதிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், பொதுவாக பத்திரங்களில் மேற்படி வாசகம் எழுதுவது இந்த பகுதிகளில் நடைமுறை என்றும், அதனை வைத்து சொத்தில் பங்கு இல்லை என்று கருத்தில் கொள்ள இயலாது என்றும், சட்டப்படி வாதிகளுக்கு பங்கு உள்ளது என்று வாதிட்டார்.

23) வாதிகள் தங்கள் பிராதில், 1994ம் வருடத்தில் முகமது இப்ராஹிமும், அவரது மனைவி ஆயிஷாம்மாளும் கொடூரமாக கொலை செய்யப்பட்டனர் என்றும், அவர்களது

மறைவிற்குப் பின்னர் இஸ்லாமிய சட்டத்தின்படி, முகமது இப்ராஹிமின் சகோதரி மற்றும் தாயாரான 1, 2 வாதிகளுக்கும், அவரது மகளான 1ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்தில் பங்கு உள்ளது என்றும், முகமது இப்ராஹிமின் சகோதரர் கொலை வழக்கில் குற்றவாளி என்பதால் அவருக்கு பங்கு இல்லை என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும் போது அவர் இறந்து விட்டார் என்றும், 1ம் பிரதிவாதி தாவா 6வது லக்க சொத்தை 3ம் பிரதிவாதிக்கு 11.02.2002ம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் அடிப்படையில் கிரையம் செய்துள்ளார் என்றும், அது வாதிகளின் உரிமத்தை கட்டுப்படுத்தாது என்பதால் அதனை கருத்தில் கொள்ளவில்லை என்றும், முகமது இப்ராஹிம் 2ம் பிரதிவாதி வங்கியில் லாக்கர் வைத்து, அதில் நகைகள், பத்திரங்கள் வைத்துள்ளார் என்றும், அதனை 1ம் பிரதிவாதி தன்னிச்சையாக எடுத்துள்ளார் என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1, 2 வாதிகள் இறந்து விட்டார்கள் என்றும், 1ம் வாதியின் வாரிசுகள் 3 முதல் 9 வாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், 3ம் வாதியும் இறந்து விட்டார் என்றும், குற்ற வழக்கில் முகமது இப்ராஹிமின் சகோதரர் கான் முகமது விடுதலை செய்யப்பட்டுள்ளதால் அவருக்கு தாவா சொத்தில் பங்கு உள்ளது என்றும், முகமது இப்ராஹிம் இறப்பதற்கு முன்பே அவரது தந்தை இறந்து விட்டார் என்பதால் வாதிகள், 1ம் பிரதிவாதி மற்றும் கான் முகமது ஆகியோருக்கு சொத்தில் பங்கு உள்ளது என்றும், மேற்படி கான் முகமது இறந்து விட்டார் என்றும், அவரது மனைவி அதற்கு முன்பே இறந்து விட்டார் என்றும், அவர்களது வாரிசுகளான 4 முதல் 8 பிரதிவாதிகளுக்கு பங்கு உள்ளது என்றும், 1ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்ற 9ம் பிரதிவாதி இவ்வழக்கில் தானாகவே சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், அவர் 1ம் பிரதிவாதியின் கீழ் மட்டுமே உரிமை கோர இயலும் என்றும், 7ம் வாதி இறந்து விட்டதால் அவரது வாரிசுகள் 10 மற்றும் 11 வாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், தாவா 9வது லக்க சொத்தில் வாதிகள் எவ்வித உரிமை மற்றும் பங்கு கோரவில்லை என்றும், இருப்பினும், பாகப்பிரிவினை வழக்கு என்பதால் தாவா 9வது லக்க சொத்தும் சேர்க்கப்பட்டுள்ளது என்றும், சொல்லியுள்ளார்.

24) 1ம் பிரதிவாதி தனது எதிர் வழக்குரையில், 1ம் பிரதிவாதியின் தந்தையான முகமது இப்ராஹிமின் குழந்தைகள் இருக்கும் பட்சத்தில் அவரது சகோதரியான 1ம் வாதி பங்கு கோர இயலாது என்றும், 1ம் பிரதிவாதியின் பெற்றோர்கள் அவரது உறவினர்களால் கொலை செய்யப்பட்டு, பின்னர் குற்ற வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர் என்றும், அதற்கு எதிராக மேல்முறையீடும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், நகைகள் 1ம் பிரதிவாதிக்கு அவரது தந்தையால் கொடையாக வழங்கப்பட்டுள்ளதால் வாதிகளுக்கு அதில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், தாவா 6வது லக்க சொத்தைப் பொறுத்து 1993ம் வருடம் 1ம் பிரதிவாதியின் தந்தை 3ம் பிரதிவாதியிடமிருந்து ரூபாய் இரண்டு லட்சம் பெற்றுக் கொண்டு, அச்சொத்தின் அசல் ஆவணத்தை அடமானம் வைத்திருந்தார் என்றும், அவர் மறைவிற்கு பின்னர் கடன் தொகை கேட்டதால் வேறு வழியில்லாமல் மத்தியஸ்தர்களை வைத்து பேசி, கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், பாதுகாப்பு பெட்டகம் வைத்திருந்த விபரம் 1ம்

பிரதிவாதிக்கு தெரியாது என்றும், இதுவரை அதனை திறக்கவில்லை என்றும், வழக்குரை 1 மற்றும் 5ம் லக்க சொத்தை 1ம் பிரதிவாதியின் தந்தை உயிருடன் இருந்த காலத்திலேயே மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்து விட்டார் என்றும், 2ம் லக்க சொத்தை 1ம் பிரதிவாதியின் தந்தை பச்சையன் என்பவரிடமிருந்து ரூபாய் நாற்பதாயிரம் பெற்றுக் கொண்டு ஒத்திப் பத்திரம் எழுதிக் கொடுத்திருந்தார் என்றும், வட்டிக்குப் பதிலாக மகசூல் அனுபவித்துக் கொள்வதாக ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றும், அவர் கடன் தொகை கேட்டு நிர்பந்தம் செய்ததால் அதற்காக சையதுகான் என்பவரிடம் ரூபாய் ஒரு லட்சம் பெற்றுக் கொண்டு, ஒத்தி தொகை கொடுத்தது போக பாக்கி தொகையை நசீராப்பாளிடம் பெற்ற ரூபாய் முப்பதாயிரம் கடன் கொடுத்து, மீதி தொகையை சொகராம்பாள் என்பவரிடம் பெற்ற கடனுக்கு கொடுத்து, அடைத்துள்ளார் என்றும், தாவா 7ம் லக்க சொத்தின் மதிப்பு அதிகமாக சொல்லப்பட்டுள்ளது என்றும், அம்பாசிடர் கார் ரூ.49,000/-க்கு 1996 - 1997ல் விற்பனை செய்யப்பட்டு, அதனுடன் ரூபாய் முப்பதாயிரம் சேர்த்து அயூப்கான் என்பவரிடம் 1ம் பிரதிவாதியின் தந்தை பெற்ற கடனை செலுத்தி விட்டார் என்றும், 3ம் லக்க சொத்து புறம்போக்கு நிலம் என்றும், அதில் உள்ள புளிய மரம் வீட்டு உபயோகத்திற்கு போதுமானதாக இல்லை என்றும், 10ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்த தொகையை தனது தந்தையின் கடனை செலுத்துவதற்கே போதுமானதாக இல்லை என்றும், தந்தை மருத்துவ செலவிற்காக பாலகிருஷ்ணன் என்பவரிடமிருந்து ரூ.1,80,000/- கடன் பெற்று, அதை கேட்டு வருகிறார் என்று சொல்லியுள்ளார்.

25) 2ம் பிரதிவாதி உத்தமபாளையம் எம்.டி.சி.சி.வங்கி மேலாளர் ஆவார். அவர் தனது எதிர்வழக்குரையில், முகமது இப்ராஹிம் தங்கள் வங்கியில் பாதுகாப்பு பெட்டகம் மற்றும் வங்கி கணக்கு வைத்திருந்தார் என்றும், அதற்குரிய வாடகையை அவரது வங்கி கணக்கிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும் என்றும், அவர் 27.04.1993 வரை பாதுகாப்பு பெட்டகத்தை பயன்படுத்தினார் என்றும், அதன்பிறகு பயன்படுத்தாமல் மூடப்பட்டுள்ளது என்றும், அவர், அவரது மனைவி மற்றும் மகளை பாதுகாப்பு பெட்டகத்திற்கு நாமினியாக நியமித்துள்ளார் என்றும், வங்கி விதி மற்றும் நடைமுறையின்படி, பாதுகாப்பு பெட்டகதாரர் இறந்து விட்டால் அவரது வாரிசுகள் பயன்படுத்த அனுமதிக்கலாம் என்றும், தங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்று சொல்லியுள்ளார்.

26) 4, 5, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில், கணக்கிடப்பட்டுள்ள பாகம் சரியல்ல என்றும், முகமது இப்ராஹிமின் சில சொத்துக்கள் சேர்க்கப்படவில்லை என்றும், 4 முதல் 8 பிரதிவாதிகளின் பங்கு பாகம் பிராதில் கூறப்படவில்லை எனறு சொல்லியுள்ளனர்.

27) 9ம் பிரதிவாதி தரப்பில், வழக்கு நிலுவையில் உள்ளதை தெரிந்து கொண்டு, 6ம் லக்க சொத்தை கிரையம் பெறவில்லை என்றும், தான் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் தான் 1ம் பிரதிவாதியிடமிருந்து தகுந்த பிரதிபிரயோஜனத்தின் பேரில் கிரையம் பெற்றுள்ளேன் என்றும்,

தான் கிரையம் பெற்ற சொத்தை 1ம் பிரதிவாதியின் பங்கு பாகத்திற்கு ஒதுக்கீடு செய்யுமாறு சொல்லியுள்ளார்.

28) வாதிகள் தரப்பில் 9ம் வாதி வா.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, 01.07.1978ம் தேதியிட்ட கான்முகமது, முகமது இப்ராஹிம் மற்றும் அவர்களது தாயாரும், 2ம் வாதியுமான முகமது பாத்திமா ஆகியோர் செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல், 07.01.1991ம் தேதியிட்ட முகமது இப்ராஹிம் பெயரில் உள்ள கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல், 15.04.1991ம் தேதியிட்ட முகமது இப்ராஹிம் பெயரில் உள்ள கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல், முகமது இப்ராஹிம் இறப்புச் சான்றிதழின் நகல், ஆயிஷாம்மாளின் இறப்புச் சான்றிதழின் நகல், 11.02.2002ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல், 09.09.2002ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல், அஞ்சல் ஒப்புதல் அடடைகளின் அசல் ஆகியவைகள் முறையே வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

29) இவ்வழக்கில் மொத்தம் 9 லக்க சொத்துக்கள் தாவா சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ளது. 7ம் லக்க சொத்து என்பது KL V 6047 என்ற அம்பாசிடர் கார் ஆகும். தாவா 8வது லக்க சொத்து என்பது 2ம் பிரதிவாதி வங்கி லாக்கரில் முகமது இப்ராஹிம் பெயரில் இருந்த நகைகள் என்று சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள “பி” அட்டவணை சொத்து முகமது இப்ராஹிமுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி “பி” அட்டவணை சொத்துக்கள் தான் இவ்வழக்கின் தாவா 1 முதல் 5 லக்க சொத்துக்கள் ஆகும். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினைப் பத்திரம் குறித்து தரப்பினர்களிடையே எவ்வித ஆட்சேபனையும் இல்லை. மேற்படி, வா.சா.ஆ.1 பாகப்பிரிவினைப் பத்திரத்தில் “அ” அட்டவணை சொத்துக்கள் கான் முகமதுவுக்கு ஒதுக்கப்பட்டதாகவும், அவர்களது தாயாரான 2ம் வாதிக்கு ரூ.1,000/- ஜீவனாம்சத்திற்கு கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது.

30) வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 கிரையப் பத்திரங்களின்படி தாவா 6ம் லக்க சொத்தை முகமது இப்ராஹிம் கிரையம் பெற்றுள்ளார். வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 இறப்புச் சான்றிதழ்களை பரிசீலிக்கையில், 12.09.1994ம் தேதி முகமது இப்ராஹிமும், அவரது மனைவி ஆயிஷாம்மாள் இருவரும் இறந்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.6 கிரையப் பத்திரத்தின்படி, 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு தாவா 6வது லக்க சொத்தை 11.02.2002ம் தேதியில் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. அதனை 1ம் பிரதிவாதி தனது எதிர் வழக்குரையில் தனது தந்தை பெற்ற கடனுக்காக மேற்படி வா.சா.ஆ.6 கிரையம் செய்ததாக ஒப்புக் கொண்டுள்ளார்.

31) பிரதிவாதிகள் தரப்பில் 8ம் பிரதிவாதி பி.வா.சா.1 சாட்சியாகவும், 1ம் பிரதிவாதி பி.வா.சா.2 ஆகவும், 9ம் பிரதிவாதி பி.வா.சா.3 சாட்சியாகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். 1ம்

பிரதிவாதியான பி.வா.சா.2 தரப்பில் 21.01.1960ம் தேதியிட்ட முகமது இப்ராஹிமின் தாயாரான 2ம் வாதி அவரது மகளான 1ம் வாதி, முகமது ராவுத்தர் மற்றும் கான் முகமது ஆகியோர் தாவா 2வது லக்க சொத்தைப் பொறுத்து செய்து கொண்ட பாகப்பாத்திய விடுதலைப் பத்திரத்தின் சான்றிட்ட நகல், 28.02.1992ம் தேதியிட்ட முகமது இப்ராஹிமுக்கு அவரது சகோதரர் கான் முகமது தாவா 9வது லக்க சொத்தைப் பொறுத்து எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல், 06.03.1992ம் தேதியிட்ட கான் முகமது அவரது சகோதரர் முகமது இப்ராஹிமின் மனைவி ஆயிஷாம்மாளுக்கு பி.வா.சா.ஆ.2 சொத்திற்கு அடுத்துள்ள பகுதியைப் பொறுத்து எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல், முகமது இப்ராஹிம் தனக்கு வர வேண்டிய கடன் தொகை குறித்து எழுதி வைத்த கணக்கு விபரத்தின் அசல், 20.04.1994ம் தேதியிட்ட முகமது இப்ராஹிம் உத்தமபாளையம் ஜமாபந்தி அதிகாரிகளுக்கு தாவா 3வது லக்க சொத்திற்கு 2சி பட்டா கோரி கொடுத்த விண்ணப்பத்தின் கை நகல், 15.06.1994 முதல் 26.06.1994 வரை முகமது இப்ராஹிம் மதுரை வடமலையான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான டிஸ்சார்ஜ் சம்மரியின் அசல் ஆகியவை பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

32) இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது பிரதிவாதிகள் தரப்பில் முகமது இப்ராஹிமின் பிற சொத்துக்களை சேர்க்கவில்லை என்று எதிர்வாதம் செய்யப்பட்டு, பி.வா.சா.ஆ.2, கான் முகமது, முகமது இப்ராஹிமுக்கு கொடுத்த கிரையப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அதன் பேரில் பி.வா.சா.ஆ.2ல் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் பகுதி பாகப்பிரிவினை தோஷத்தால் இவ்வழக்கு பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக வாதிகள் தரப்பில் தாவா 9வது லக்க சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், வாதிகள் தங்களது பிராதில், தாவா 9லக்க சொத்தைப் பொறுத்து எவ்வித பங்கும் கோரவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

33) வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், *"1ம் பிரதிவாதியின் பெற்றோர்கள் 12.09.1994 அன்று கொலை செய்யப்பட்டார்கள் என்றால் சரி தான். அந்த கொலையை என்னுடைய பெரிய மாமா கான் முகமது மற்றும் அவர் மகன்கள் தான் செய்தார்கள் என்று போலிசார் வழக்கு தொடர்ந்தார்கள் என்றால் சரி தான். அந்த கொலையில் இறந்து போன இருவரில் யார் முதலில் இறந்தார்கள் என்று இதுவரை தெரியவில்லை என்றால் முதலில் என் மாமா மனைவி தான் இறந்தார் என்று சொன்னார்கள். என் தாயாருக்கு திருமணமாகி சுமார் 50 வருடத்திற்கும் மேல் இருக்கும் என்று சொன்னால் சரி தான். 1981ம் ஆண்டு வாக்கில் தான் நாங்கள் சென்னைக்குப் போனோம். லாக்கருக்குள் என்ன இருக்கிறது என்று எனக்கு தெரியாது. தாவா 8வது லக்க சொத்துக்களில் ஒரு இடமும், ஒரு வீடும் விற்காமல் எனது பெரிய மாமா கான் முகமது மக்களிடம் உள்ளது. ஏ ஷெடியூலில் கண்ட 8வது லக்க வீட்டை கான் முகமது முகமது இப்ராஹிமுக்கும் அவரது மனைவிக்கும் 1992ம் ஆண்டே கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரி தான்"* என்று சாடசியம் அளித்துள்ளார்.

34) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், *“வழக்கிற்கு பின்னர் தாவா 1வது லக்க சொத்தை யாருக்கோ கிரையம் கொடுத்து விட்டார்கள். அந்த சொத்தை வாங்கிய நபரை இவ்வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரி தான். தாவா 2வது லக்க சொத்தைப் பொறுத்து 1960லியே என் பாட்டியும், தாயாரும் பதிவு விடுதலை எழுதிக் கொடுத்து விட்டார்க்ள என்று சொன்னால் சரியல்ல. தாவா 6வது லக்க சொத்தை முகமது இப்ராஹிம் கொடுக்க வேண்டிய கடனுக்காக விட்டு விட்டார் என்று சொன்னால் அவர் யாரிடமும் கடன் வாங்கவில்லை. பலருக்கு கடன் கொடுத்திருக்கிறார். லாக்கரில் உள்ள நகைகள் முகமது இப்ராஹிமினால் வாங்கப்பட்டதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி தான்”* என்று சாட்சியம் அளித்துள்ளார்.

35) பி.வா.சா.1 முகமது இப்ராஹிமின் சகோதரரான கான் முகமதுவின் மகன் ஆவார். அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், *“நான் பிறந்தது முதல் அந்த வீட்டில் தான் குடியிருக்கிறேன். அந்த வீடு என் தந்தைக்குப் பாத்தியப்பட்டது. அது என் தாத்தா சொத்து. கொலை நடந்த அன்று நான், என் தந்தை, என் சகோதரர்கள் அனைவரும் கொலை நடந்த வீட்டின் மாடியில் இருந்தோம் என்றால் சரி தான். அந்த கொலை வழக்கில் என் தந்தையையும், என்னையும், என் சகோதரர்களையும் எதிரிகளாக சேர்த்திருந்தார்கள் என்றால் சரி தான். கொலை செய்யப்பட்ட நேரம் என்ன என்பது இதுவரை தெரியாது என்றால் சரி தான். கொலை நடக்கும் சமயத்தில் என் சித்தப்பா இதய நோய் காரணமாக மதுரை வடமலையான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றால் சரி தான். நானும் அவரோடு மருத்துவமனையில் உதவிக்கு இருந்தேன். என் தந்தைக்கு நாங்கள் வசிக்கும் வீடும், வயலும் இருந்தது. தற்போது வீடு மட்டும் தான் எங்களிடம் இருக்கிறது.”* என்று சாட்சியம் அளித்துள்ளார்.

36) முகமது இப்ராஹிமின் மகளான 1ம் பிரதிவாதியான பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், *“கொலை வழக்கில் கான் முகமது மற்றும் அவர் மகன்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என்று சொன்னால் கண்ணால் பார்த்த சாட்சி இல்லை என்று அவர்கள் விடுவிக்கப்பட்டு விட்டார்கள். எனது தந்தை இறந்த பின்னர் நான் வயலை விற்றிருக்கிறேன் என்று சொன்னால் சரி தான். 3வது லக்க சொத்தைப் பொறுத்து 2சி பட்டா மட்டும் தான் என் தந்தை பெயருக்கு இருந்தது என்றால் சரி தான். தாவா சொத்துக்கள் என் தந்தைக்குப் பாத்தியப்பட்டவை அல்ல என்று நாங்கள் எதிர்வாதம் செய்யவில்லை என்றால் சரி தான். என் தந்தை இறப்பதற்கு முன்பு தாவா சொத்துக்கள் எதையும் கிரையம் செய்யவில்லை. என் பெற்றோர் கொலையுண்டதில் அவர்களில் யார் முதலில் இறந்தார்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் சரி தான். என் தந்தை இறக்கும் போது அவரது தாயார், சகோதரர், சகோதரி ஆகியோர் உயிருடன் இருந்தார்கள் என்றால் சரி தான். நான் என் பெற்றோருக்கு ஒரே*

*வாரிசு என்றால் சரி தான். என் தந்தை இறக்கும் போது எனக்கு 14 வயது. அந்த சமயத்தில் நான் மைனராக இருந்ததால் என் சார்பாக என் தாத்தா அந்த பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டார் என்றால் சரி தான். பாகம் பிரிப்பது குறித்து ஜமாத்தில் பேச்சு வார்த்தை நடந்தது என்றால் சரி தான். முகமது ராவுத்தர் இறந்த பின்னர் அவருடைய சொத்துக்கள் அவரது மனைவி முகமது பாத்திமா, 1ம் வாதி சொகராம்மாள், கான் முகமது மற்றும் என் தந்தைக்கு கிடைத்தது என்றும், அவ்வாறு கிடைத்த சொத்தில் முகமது பாத்திமா மற்றும் சொகராம்மாளுக்குப் பாத்தியப்பட்ட பாகத்தை பொறுத்து தான் பி.வா.சா.ஆ.1 விடுதலைப் பத்திரத்தின் மூலம் விடுதலை கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. முகமது ராவுத்தருக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து தான் பி.வா.சா.ஆ.1 விடுதலைப் பத்திரம் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா 4வது லக்க சொத்தின் மேற்குப் பகுதியை மட்டும் பி.வா.சா.ஆ.2 வாயிலாக என் பெரியப்பா, அப்பாவிற்கு விற்றார் என்று சொன்னால் அந்த வீட்டை என் தந்தைக்கும், தாயாருக்கும் சரி பாதியாக கொடுத்தார்கள்"* என்று சாட்சியம் அளித்துள்ளார்.

37) மேலும், பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், *"பி.வா.சா.ஆ.4 நகைக்கடன்கள் என்று குறிப்பிட்டிருப்பது என் தந்தையிடம் மூன்றாம் நபர்கள் நகையை கொடுத்து கடன்கள் வாங்கிய விபரங்கள் ஆகும். 3ம் பிரதிவாதிக்கு தாவா 6வது லக்க சொத்தின் ஒரு பகுதியை நான் கிரையம் எழுதிக் கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால் என் தந்தை இறந்த பிறகு பகீம் முகமது மேற்படி சொத்தை என் தந்தையிடமிருந்து அடமானம் வாங்கியிருப்பதாக சொல்லி அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்தார். அசல் பத்திரமும் அவரிடம் தான் இருந்தது. அதனால் அவருக்கே மேற்படி சொத்தை கிரையம் எழுதி கொடுத்து விட்டேன் என்று சொன்னால் சரி தான். கடன்கள் திரும்ப செலுத்தப்பட்டு விட்டன என்பதற்கு ஆதாரங்கள் என்னிடம் இல்லை."* என்று சாட்சியம் அளித்துள்ளார்.

38) பி.வா.சா.3, 9ம் பிரதிவாதியின் கணவர் ஆவார். 9ம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே, தாவா 6வது லக்க சொத்தினை 1ம் பிரதிவாதியிடமிருந்து 14.07.2000ம் தேதியில் தகுந்த தொகை கொடுத்து, கிரையம் பெற்றதாக முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளார்.

39) இவ்வழக்கு முகமது இப்ராஹிமுக்குப் பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களில் தங்களுக்கு பாகம் உள்ளது என்று முதலில் முகமது இப்ராஹிமின் சகோதரியான 1ம் வாதியும், அவரது தாயாரான 2ம் வாதியும், அவரது மகளான 1ம் பிரதிவாதிக்கு எதிராகவும், முகமது இப்ராஹிம் லாக்கர் வைத்துள்ள 2ம் பிரதிவாதி வங்கிக்கு எதிராகவும் மற்றும் 1ம் பிரதிவாதி தாவா 6வது லக்க சொத்தைப் பொறுத்து 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளதால் அவருக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1,

2 வாதிகள் இறந்து விட்டதால் 1ம் வாதியின் வாரிசுகளாக 3 முதல் 9 வாதிகள் சேர்க்கப்பட்டு, பின்னர் 1ம் வாதியின் கணவரான 3ம் வாதியும், அவரது மகளான 7ம் வாதியும் இறந்து விட்டதால் 7ம் வாதியின் வாரிசுகள் 10 மற்றும் 11 வாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

40) இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது முகமது இப்ராஹிமின் சகோதரரான கான் முகமது மற்றும் அவரது மகன்கள் குற்ற வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளதாலும், கான் முகமது இறந்து விட்டதாலும் கான் முகமதுவின் வாரிசுதாரர்களாக 4 முதல் 8 பிரதிவாதிகள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். தாவா 6வது லக்க சொத்தை 1ம் பிரதிவாதியிடமிருந்து 9ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளதால் அவர் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்.

41) இவ்வழக்கில் முகமது இப்ராஹிமும், அவரது மனைவி ஆயிஷாம்மாள் ஆகியோர் ஒரே நாளில் கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதும், மேற்படி கொலை வழக்கில் கான் முகமது குடும்பத்தார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதும் இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளாகும். மேற்படி முகமது இப்ராஹிம் முதலில் இறந்தாரா அல்லது அவரது மனைவி இறந்தாரா என்பது குறித்து, வாதிகள் தரப்பில், பிரிவு 131 இஸ்லாமிய சட்டத்தின்படி, பொதுவான நிகழ்வில் இரண்டு நபர்கள் இறந்து, யார் முதலில் இறந்தார் என்பது தெரியாத பட்சத்தில், மேற்படி இறந்த நபர்கள் ஒரே சமயத்தில் இறந்தார்கள் என்று கருதி, அவர்களது சொத்துக்களை அவரது வாரிசுதாரர்கள் எடுத்துக் கொள்ளலாம் என்றும், அதனடிப்படையில், முகமது இப்ராஹிம் மற்றும் அவரது மனைவியின் சொத்துக்கள் சட்டப்படி அவர்களது வாரிசுகளுக்கு சென்றடையும் என்றும், பிரதிவாதிகள் தரப்பில் இறந்த நபர்களில் யார் மூத்தவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் என்பதை கருத்தில் கொண்டு, அவர் தான் முதலில் இறந்திருப்பார் என்று அனுமானித்துக் கொள்ளலாம் என்றும் கீழ்கண்ட பிரிவினை மேற்கோள் காட்டி வாதிட்டார்கள்.

*__42) 131. Death in common calamity__ – "Where more persons than one die in a common calamity and it is not proved as to who died first, the property of each of them would be inherited by his heirs and there would be no mutual rights of inheritance between them.*

*Uncertainty as to order in which deaths occurred – The rule stated in the section is, according to better opinion, the rule of Mohammedan law. It will be presumed that the death of the whole party was simultaneous and the property left will be distributed among the surviving heirs as if the intermediate heirs who died at the same time with the original proprietor had never existed.*

*The question will, it seems, be governed by the Indian Evidence Act. There is no provision in the Act on this point. There is a conflict of opinions on this point. It has*

*been held in some cases that when the evidence is evenly balanced, the probabilities are in favour of the younger man surviving the elder, the ordinary presumption in human nature being that the elder man died first. The onus of proving death of any person at any particular period must rest with the person to whose title that fact is essential. The onus lies on the person, who has to prove the survivorship."*

43) இவ்வழக்கில், முகமது இப்ராஹிம் மற்றும் அவரது மனைவி ஆயிஷாம்மாள் ஆகியோர் ஒரே நாளில் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால், யார் முதலில் இறந்தார்கள் என்பது குறித்து இரு தரப்பிலும் எவ்வித சாட்சியமும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இந்நிலையில், மேற்படி பிரிவு 131ன்கீழ் முகமது இப்ராஹிம் மற்றும் அவரது மனைவி இருவரும் ஒரே சமயத்தில் இறந்தார்கள் என்று கருதி, இருவருடைய சொத்துக்கள் அவர்களின் சட்டப்படியான வாரிசுகளுக்கு நேரிடையாக சென்றடையும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

44) வாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி அவரது தந்தை வாங்கிய கடனுக்காக தாவா 6வது லக்க சொத்தை 3 மற்றும் 9 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்திருந்தாலும், அது வாதிகளின் பங்கைப் பொறுத்து கட்டுப்படுத்தாது என்று கீழ்கண்ட சட்டப்பிரிவை மேற்கோள் காட்டி வாதிட்டார்.

***<u>45) 47 Alienation by one of several heirs for payment of debts –</u>*** *"One of several heirs of the deceased Mahomedan, though he may be in possession of the whole estate of the deceased, has no power to alienate the shares of his co-heirs, not even for the purpose of discharging the debts of the deceased. If he sells or mortgages any property in his possession forming part of the estate of the deceased, through it may be for payment of the debts of the deceased, such sale or mortgage operates as a transfer only of his interest in the property. It is not binding on the other heirs or the other creditors of the deceased. The transferor, of course, is, in his turn, entitled to obtain contribution from his co-heirs."*

46) 1ம் பிரதிவாதி தரப்பில், தனது தந்தை பல நபர்களிடம் கடன் பெற்றிருந்தார் என்பதற்கு பி.வா.சா.ஆ.4 கணக்கு விபரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், பி.வா.சா.2 தனது சாட்சியத்தில், கடன் தொகை கொடுக்கப்பட்டது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். 1ம் பிரதிவாதி தனது தந்தை வாங்கிய கடனை திரும்ப செலுத்துவதற்காக வா.சா.ஆ.6 தாவா 6வது லக்க சொத்தைப் பொறுத்து கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்திருந்த போதிலும், மேற்படி பிரிவின் கீழ், மேற்படி கிரையம், வாதிகளின் பங்கைப் பொறுத்து கட்டுப்படுத்தாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

47) இஸ்லாமிய சட்டத்தின்படி, முகமது இப்ராஹிம் இறக்கும் போது அவரது தாயாரான 2ம் வாதியும், சகோதரியான 1ம் வாதியும், சகோதரரான கான் முகமதுவும், மகளான 1ம் பிரதிவாதியும் மட்டுமே வாரிசுகளாக இருந்துள்ளார்கள் என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளாகும். ஏற்கெனவே, இந்நீதிமன்றம் முகமது இப்ராஹிமும், அவரது மனைவியும் ஒரே சமயத்தில் இறந்ததாகவே கருதி அவர்களது பங்குகள் நேரிடையாக வாரிசுகளுக்கு சென்றடையும் என்று தீர்வு கண்டுள்ளது. இந்நிலையில், இஸ்லாமிய சட்டத்தின்படி, 2 : 1 என்ற விகிதத்தின்படி, முகமது இப்ராஹிமின் சட்டப்படியான வாரிசுகளுக்கு பாகம் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

48) முகமது இப்ராஹிமுக்கு 324 பங்கு உள்ளது என்று எடுத்துக் கொண்டால், அவரது சட்டப்படி முன்னுரிமை பெற்ற பங்குதாரர் என்ற முறையில் முகமது இப்ராஹிமின் தாயாரான 2ம் வாதிக்கு 1/6 பங்கு அதாவது 324/6 வீதம் 54 பங்கு உள்ளது என்றும், 2வது முன்னுரிமை பங்குதாரரான அவரது மகளான 1ம் பிரதிவாதிக்கு மீதமுள்ள 5/6 பாகத்தில் ஒரே மகள் என்ற முறையில் பாதி பாகமான 2½/6 பாகம் 1ம் பிரதிவாதிக்கும், மீதமுள்ள 2½/6 பாகம் அவரது சகோதரரான கான் முகமதுவுக்கும், அவரது சகோதரியான 1ம் வாதிக்கும் 2 : 1 என்ற விகிதத்தில் கிடைக்கத்தக்கது என்றும், அதன்படி, 1ம் பிரதிவாதிக்கு பாதி பங்கில் அதாவது 270ல் பாதி 135 பங்கு உள்ளது என்றும், 3வது முன்னுரிமை பங்குதாரரான முகமது இப்ராஹிமின் சகோதரரான கான் முகமது மற்றும் சகோதரியான 1ம் வாதிக்கு 2 : 1 என்ற விகிதத்தில் மீதி 135ல் கான் முகமதுவுக்கு 90 பங்கும், 1ம் வாதிக்கு 45 பங்கும் உள்ளது.

49) மேற்படி, கான் முகமதுவின் பங்கான 90ல் அவரது தாயார் 2ம் வாதிக்கு 1/6 வீதம் 90/6ல் 15 பங்கும், மீதி 5/6 பங்கில் கான் முகமதுவின் குழந்தைகளான 4 முதல் 8 பிரதிவாதிகளுக்கு 75 பங்கும் உள்ளது என்றும், 2ம் வாதிக்கு முகமது இப்ராஹிமிடமிருந்து வந்த 54 பங்கும், கான் முகமதுவிடமிருந்து வந்த 15 பங்கையும் சேர்த்து 69 பங்கு உள்ளது என்றும், மேற்படி 69 பங்கில் 2ம் வாதியின் மகளான 1ம் வாதிக்கு 35 பங்கும், மீதி 34 பங்கில் 1ம் பிரதிவாதியின் 1/9 பங்கான 4 பங்கும், 4 முதல் 8 பிரதிவாதிகளுக்கு 8/9 பங்கான 30 பங்கும் உள்ளது என்றும், கான் முகமதுவின் வாரிசுகளான 4 முதல் 8 பிரதிவாதிகளுக்கு மொத்தம் 75 + 30 சேர்த்து 105 பங்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

50) 1ம் வாதிக்கு அவரின் சகோதரர் முகமது இப்ராஹிமிடமிருந்து வந்த 45 பங்கும், தாயார் 2ம் வாதியிடமிருந்து வந்த 35 பங்கும் சேர்ந்து 80 பங்கு உள்ளது என்றும், அதில், 2 : 1 என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் அவரது ஆண் வாரிசுகளான 6 மற்றும் 9 வாதிகளுக்கு தலா 20 பங்கு உள்ளது என்றும், பெண் வாரிசுகளான 4. 5, 7, 8 வாதிகளுக்கு தலா 10 பங்கும் உள்ளது என்றும், 7ம் வாதி இறந்து விட்டதால் அவரது பங்கில் 2 : 1 விகிதாச்சாரத்தின்படி 10 மற்றும் 11 வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றும், 1ம் பிரதிவாதிக்கு

அவரது தந்தை முகமது இப்ராஹிமிடமிருந்து வந்த 135 பங்கும், அவரது பாட்டி 2ம் வாதியிடமிருந்து வந்த 4 பங்கும் சேர்ந்து 139 பங்கு கிடைக்கத்தக்கது என்றும், கான் முகமதுவின் வாரிசுகளான 4 முதல் 8 பிரதிவாதிகளுக்கு அவரது தந்தையிடமிருந்து கிடைத்த 75 பங்கும், பாட்டியான 2ம் வாதியிடமிருந்து கிடைத்த 30 பங்கும் மொத்தம் 75 + 30 சேர்த்து 105 பங்கு கிடைக்கத்தக்கது இந்நீதிமன்றம் கருதுகிறது.

51) எனவே, மேலே விவரிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில், தாவா 1 முதல் 8 லக்க சொத்துக்களில் 4 முதல் 6 மற்றும் 8 முதல் 11 வாதிகளுக்கு 80/324 பாகமும், 1ம் பிரதிவாதிக்கு 139/324 பாகமும் கிடைக்கத்தக்கது என்றும், தாவா 9வது லக்க சொத்தைப் பொறுத்து வாதிகள் பங்கு கோரவில்லை என்பதால் அதைப் பொறுத்து வாதிகளுக்கு பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து அவ்வாறே இவ்வெழுவினாக்களுக்கு விடையளிக்கிறது.

**52) எழு வினா எண் 4 :**

ஏற்கெனவே முந்தைய எழு வினாக்களில் வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று தீர்வு கண்டுள்ள நிலையில், வாதிகளுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து அவ்வாறே இவ்வெழுவினாவிற்கு விடையளிக்கிறது.

53) முடிவில், இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு, தாவா 1 முதல் 8 லக்க சொத்துக்களில் 4 முதல் 6 மற்றும் 8 முதல் 11 வாதிகளுக்கு 80/324 பாகமும், 1ம் பிரதிவாதிக்கு 139/324 பாகமும் கிடைக்கத்தக்கது என்றும், தாவா 9வது லக்க சொத்தைப் பொறுத்து வாதிகள் பங்கு கோரவில்லை என்பதால் அதைப் பொறுத்து வாதிகளுக்கு பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றும் முதல்நிலை தீர்ப்பாணை வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. தரப்பினர்களின் உறவு முறையை கருத்தில் கொண்டு செலவு தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரிடையாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரி பார்க்கப்பட்டு 12.11.2021ம் நாள் இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்) கா.கன்யாதேவி,
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்

**வாதிகள் தரப்பு சாட்சி :**

வா.சா.1 ... அஜ்மல்கான் (9ம் வாதி)

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

வா.சா.ஆ.1 ... 01.07.1978ம் தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.2 ... 07.01.1991ம் தேதியிட்ட கிரையப் பத்திரம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.3 ... 15.04.1991ம் தேதியிட்ட கிரையப் பத்திரம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.4 ... முகமது இப்ராஹிம் என்பவரின் இறப்புச் சான்றிதழின் நகல்

வா.சா.ஆ.5 ... ஆயிஷா அம்மாள் என்பவரின் இறப்புச் சான்றிதழின் நகல்

வா.சா.ஆ.6 ... 11.02.2002ம் தேதியிட்ட கிரையப் பத்திரம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.7 ... 09.09.2002ம் தேதியிட்டு 1ம் வாதி 1, 2, 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல்

வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ.10 வரை ... மேற்படி அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டைகள்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u>**

பி.வா.சா.1 ... அப்துல் நசீர் (8ம் பிரதிவாதி)

பி.வா.சா.2 ... ஷாகிதா பர்வீன் (1ம் பிரதிவாதி)

பி.வா.சா.3 ... பீர் முகமது (9ம் பிரதிவாதியின் கணவர்)

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

பி.வா.சா.ஆ.1 ... 21.01.1960ம் தேதி பாகப்பாத்திய விடுதலைப் பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

பி.வா.சா.ஆ.2 ... 28.02.1992ம் தேதி கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

பி.வா.சா.ஆ.3 ... 06.03.1992ம் தேதி கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

பி.வா.சா.ஆ.4 ... 1ம் பிரதிவாதியின் தந்தை எழுதிய கணக்கு விபரம்

பி.வா.சா.ஆ.5 ... 1ம் பிரதிவாதியின் தந்தை உத்தமபாளையம் ஜமாபந்தி அதிகாரிக்கு 20.04.1994ம் தேதியிட்டு எழுதிக் கொடுத்த மனுவின் கை நகல்.

பி.வா.சா.ஆ.6 ... 1ம் பிரதிவாதியின் தந்தை மதுரை வடமலையான் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான டிஸ்சார்ஜ் சம்மரி.

(ஒப்பம்) கா.கன்யாதேவி,
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

... உண்மை நகல் ...